வாசிக்க: 2 ராஜாக்கள் 20:1-11

***"நீங்கள் சுகமடையும்படி உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகுந்த பயனுள்ளதாயிருக்கிறது" (யாக் 5:16)***

நமது ஆரோக்கியத்திற்குப் பிறரது ஜெப உதவியை நாடும்படித் திருவசனத்தில் போதிக்கப்பட்டிருக்கிறோம். சுகமளிக்கும் வரம்பெற்ற ஊழியரது ஜெப உதவியை நாடலாம். சுகமளிக்கும் கூட்டங்களில் பங்குபெறலாம். தங்கள் பகுதிகளுக்கு வந்த பேதுரு, பிலிப்பு, பவுல் ஆகியோரின் சுகமாக்கும் வரங்களை மக்கள் பயன்படுத்திக் கொண்டார்கள் (அப் 5:15,16; 8:5-8; 28:8,9). ஆனால் துர்ப்பாக்கியமாக இன்று சுகமளிக்கும் ஊழியங்கள் பல வியாபாரமயமாகிவிட்டன. எப்படியாவது சுகம்பெற வேண்டுமென்ற தத்தளிப்பில் யாரும் நம்மை ஏமாற்றிவிட இடங்கொடாதிருப்போம். விசுவாசமுள்ள ஜெபத்தை ஏறெடுக்கும்படி "சபையின் மூப்பர்களை" வரவழைக்க வேண்டுமென்பதே நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்ட தெளிவான ஆலோசனை (யாக் 5:14,15). அவர்களுக்குப் பகட்டான வரங்களில்லாதிருக்கலாம்; ஆனால் சபையை மேய்ப்பதற்குக் கண்காணிகளாய் அவர்களை வைத்தது தூயாவியான வரானதால் அவர்களது ஜெபத்தை அவர் மதிக்கிறார் (அப் 20:17,28).

முழுநேர ஊழியரல்லாத விசுவாசிகளும் நோயாளிகளுக்கு ஜெபித்துதவலாம். "விசுவாசிக்கிறவர்கள் என் நாமத்தினால்... வியாதியுள்ளோர்மேல் கைகளை வைப் பார்கள், அப்பொழுது அவர்கள் சுகமாவார்கள்" என்று கிறிஸ்து ஆணித்தரமாய்ச் சொன்னார் (மாற் 16:17,18). விசுவாசிகளில் எவரையும் அலட்சியமாய் எண்ண வேண்டாம். பிரபல அப்போஸ்தலனாக மாற இருந்த பவுலுக்குச் சுகமளிப்பு ஊழியம் செய்ய தேவன் 'சாதா சீடன்' அனனியாவைத்தான் தெரிந்துகொண்டார்! (அப் 9:10,17,18).

மற்றவர்கள் நமக்காக ஏறெடுக்கும் ஜெபங்களைக் கர்த்தர் கேட்கிறார் என்பது உண்மைதான். ஆனாலும் முடிவாக நாம் நமது விசுவாசத்தினாலேயே ஆண்ட வரிடம் நெருங்கவேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார். தீர்க்கன் ஏசாயா தனக் கருகிலிருந்தாலும் அவரது ஜெபத்தில் சார்ந்துவிடாது, எசேக்கியா தானே கண்ணீ ரோடு கடவுளிடம் மன்றாடினார். அப்பொழுது கர்த்தர், "உன் விண்ணப்பத்தைக் கேட்டேன் ... இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்" என்றார் (2 இரா 20:1-5).

எதிர்மறையான வார்த்தைகள் விசுவாசத்தைக் கொல்லும். தேவனது வாக்கு களையே அறிக்கையிடுவோம். கடந்த காலத்தில் ஏதாவது பாதகமாக நடந்திருந் தால் அதையெல்லாம் நினைக்கவேண்டாம். அவர் இறந்தோரின் தேவனாயிராமல் இருப்போரின் தேவனாயிருக்கிறார்! அவர் ஆபத்துக்காலத்தில் "அனுகூலமான" சமய சஞ்சீவியாய் இருக்கிறார் (சங் 46:1). முறுமுறுக்காமலும் கவலைக்கும் குழப்பத்திற்கும் இடங்கொடாமலும் தேவனைத் துதித்துக்கொண்டேயிருப்போம் (சங் 30:4,5). போதுமான அளவு விசுவாசிக்க முடியாவிட்டாலும், அந்தச் சிறுவனின் தகப்பனைப்போல, "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" என உணர்வுகளை ஆண்டவரிடம் கொட்டி அழுவோம் (மாற் 9:24). அவர் புரிந்துகொள்கிறார்!

*நான் சுகமானேன், புண்ணியரின் காயங்களால்;*
*ஆ அல்லேலூயா ஆனந்தமே, ஆ அல்லேலூயா ஆரோக்கியமே!*
*— V. எசேக்கியா பிரான்சிஸ்*